பல கல்லூரிகளிலும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைதான் தமிழ்க் கல்லூரிகளைப் பொறுத்தவரை இருக்கிறது. இடையில் புலவர் படிப்புக்கு மாணவிகளைமட்டும் சேர்ப்பது என்று 1965-66-ல் ஒரு முடிவு எடுத்தார்கள். அப்பொழுது மாணவர்களைச் சேர்க்கவில்லை. அதன் பிறகு 1967-68-ல் 50:50 என்ற அளவில், மாணவர்கள் பாதி, மாணவிகள் பாதி என்ற அளவில் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் முடிவு எடுத்து அப்படிச் சேர்க்கப்படுகிறார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கல்லூரியில் சித்த, ஆயுர்வேத முறை மருத்துவத்தையும் பாடமாக அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் வைத்தியர்களாகவும் இருந்தார்கள். புலவர் பாடத்தோடு, மருத்துவத்தையும் படித்தார்கள். இப்பொழுது, தமிழ்ப் புலவர்களுடைய பணி தனியாக இருக்கிறது. சித்த, ஆயுர்வேத மருத்துவத்தைப் படிக்க தனியாக கல்லூரி இருக்கிறது. ஆகவே, புலவர் பாடத்தோடு மருத்துவத்தையும் இணைப்பது பொருத்தமானது அல்ல.

School in Therikudiyiruppu

*81 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any school is functioning at present with the consent of the Tiruchendur Panchayat Union in Therikudiyiruppu village of Tiruchendur taluk in Tirunelveli district; and

(b) if so, the reasons for the Government not recognising it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்தப் பள்ளிக்கு 1-6-1968 முதல் 31-5-1970 வரை தாற்காலிக ஏற்பு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இதேபோன்று ராதாபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக திறக்கப்பட்ட பின்னர் அனுமதி வேண்டும் என்று கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதலால், அமைச்சரவர்கள் அதைக் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இரண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கி, நிபந்தனை அடிப்படையில் இல்லாமல், அவற்றை மூடுவதா, இல்லையா என்ற பிரச்சினை எழுந்தது. பல பள்ளிக்

1970 சனவரி 27]

கூடங்கள் அப்படி அனுமதி இல்லாமல் நடத்தப்பட்டு வந்தன. அதிலே, 30 மாணவர்கள் குறைந்த அளவில் இருந்தால், அப்படிப் பட்ட பள்ளிக்கூடங்களே அனுமதிக்கலாம் என்று உத்தரவு பிறப் பிக்கப் பட்டது. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பள்ளிகள் சம்பநதமாக அனுமதி வழங்கப்பட்டதா என்கிற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லே. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம். இனிமேல் ஊராட்சி ஒன்றியங் கள் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் துவக்கக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

Collections for State Loans

* 82 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Vigilance Commission has been appraised of by Thiru R. K. Balasubramanian, Advocate, Mylapore, about the coercive methods adopted by the Revenue Officials while collecting subscription to the State Loans and

(*b*) if so, the action taken thereon?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: (*a*) Yes.

(*b*) The Government are satisfied that there was no coercion on the part of the officials concerned.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலேவர் அவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் பலவந்த முறையைக் கையாண்டால் தான் நிச்சயம் வசூல் செய்யலாம் என்று செய்கிருர்கள். இனி மேலாவது வேறு முறைகளேக் கையாள்வது பொறுத்து அரசாங்கம் நாட்டம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் எப்பொழுதும் கற்பனேயிலேயே இருக்கிருர்கள். இந்த மாநிலக் கடன்கள் திரட்டும் முறையில் கொள்கை மாற்றம் செய்திருக் கிறது. எந்தவிதமான பலவந்தமும் இன்றியே ரூ. 20 கோடி கடன் எழுப்பியுள்ளோம். தமிழகத்தில், மாண்புமிகு உறுப்பினர் போன்ற சில பேரைத் தவிர, எந்தவிதமான நன்மையாக இருந் தாலும் அதைப்பாராட்டக் கூடாது என்று இருப்பவர்கள் தவிர, அப்படிப்பட்ட பிடிவாதம் பிடிப்பவர்களேத் தவிர, மற்றவர்கள் பாராட்டும் அளவில், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில், நடந்திருப்பதைப் பல பத்திரிகைகள் கூட தலேயங்கமெல்லாம் எழுதியிருக்கிருர்கள் என்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the practice of collecting subscriptions to the State loans has almost become universal. Even in our taluk we get a number of complaints. People have to go to the Revenue officials for so many purposes.